தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னரே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், அரசு மற்றும் மாவட்ட நிருவாகம் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால், மிக அதிக அளவில் பெய்த மழையால், பல குடியிருப்புகளில் வெள்ளம் சூழ்ந்தது. இந்திய இராணுவம், கடற்படை, விமானப் படை, தேசிய பேரிடர் மீட்புக் குழு, மாநில பேரிடர் மீட்புக் குழு, காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், இதர துறையினர் என 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு, பாதிப்புக்குள்ளான மக்கள் மீட்கப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருத்துவ வசதி மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வரலாறு காணாத பெருமழை காரணமாக, மழை வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 4 இலட்சம் ரூபாயும், குடிசை மற்றும் நிரந்தர வீடுகளில் வசித்த வெள்ள பாதிப்புக்கு உள்ளான மக்கள், கால்நடையை இழந்து பாதிக்கப்பட்ட மக்கள், பயிரிழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட, பாதிப்படைந்த விவசாயிகள், பாதிக்கப்பட்ட மீனவர்கள் உட்பட பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரண உதவித் தொகை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவுப்படி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்தும் விரைவில் ஒளி மிகுந்த புதிய வாழ்வை நிர்மாணிக்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த இயற்கைப் பேரழிவால் உயிரிழந்த மக்களின் குடும்பங்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

(ஆ) திரு. முப்தி முகமது சயீத், ஜம்மு-காஷ்மீர் மாநில முதலமைச்சர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முப்தி முகமது சயீத், ஜம்மு-காஷ்மீர் மாநில முதலமைச்சர் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

2016 ஜனவரி 21] [பேரவைத் தலைவர்]

“ஜம்மு—காஷ்மீர் மாநில முதலமைச்சரும், அம்மாநிலத்தில் அமைதி தவழ தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவரும், மத்திய, மாநில அரசுகளில் நீண்ட காலம் பணியாற்றி அனுபவம் பெற்ற மூத்த தலைவருமான திரு. முப்தி முகமது சயீத் அவர்கள், 7—1—2016 அன்று தனது 79—வது வயதில் உடல்நலக் குறைவு காரணமாக புது தில்லியில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திரு. முப்தி முகமது சயீத் அவர்கள் 1986 ஆம் ஆண்டு மத்திய சுற்றுலா அமைச்சராகவும், 1989 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை மத்திய உள் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர். 2002 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை மற்றும் மார்ச் 2015 முதல் ஜம்மு—காஷ்மீர் மாநில முதலமைச்சராக திறம்படப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், ஜம்மு—காஷ்மீர் மாநில மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.”

(இ) திருமதி மனோரமா, பழம்பெரும் நடிகை மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழம்பெரும் நடிகை திருமதி மனோரமா அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

முற்பகல் 10—10

“பழம்பெரும் திரைப்பட நடிகையும், தமிழ் திரையுலகினராலும், திரைப்பட ரசிகர்களாலும் ‘ஆச்சி’ என்று அன்போடு அழைக்கப்படும் திருமதி மனோரமா அவர்கள், உடல் நலிவுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 10—10—2015 அன்று காலமானார் என்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திருமதி மனோரமா அவர்கள், மேடை நடிகையாக தன்னுடைய கலையுலக வாழ்க்கையைத் தொடங்கி, சினிமாவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் என்று அன்றைய தலைமுறை கதாநாயகர்கள் மற்றும் இன்றைய தலைமுறை கதாநாயகர்களுடன் 1,300 திரைப்படங்களுக்கு மேல் நடித்து,